49—

மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகக் கட்டடம்

***38660—திரு. பி.வி. பாரதி**:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வரும் சீர்காழி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கென சீர்காழி தாலுகா, காரைமேடு கிராமம், புல எண் 443/2—ல் 2.48.5 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலத்தில் 1.24.0 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலம் போக்குவரத்துத் துறைக்கு நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே, தேவையான நிதி ஒதுக்கீடு பெற்று சீர்காழி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். நாங்கள் வணங்குகின்ற தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் இந்த நேரத்திலே வணங்குகிறேன். 'கஜா' புயலினுடைய கோர தாண்டவத்தை வென்ற மாண்புமிகு முதலமைச்சரையும், மாண்புமிகு துணை முதலமைச்சரையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், அரசுத் துறை அதிகாரிகளோடு 'கஜா' புயல்*

2019 பிப்ரவரி 11]

வந்த சுவடே தெரியாத அளவுக்கு சீர்மிகு பணிகளை மேற்கொண்ட எங்கள் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கடந்த கால ஆட்சியிலே 2013 ஆம் ஆண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் சீர்காழிக்கு அனுமதிக்கப்பட்டு, பல்வேறு காலகட்டத்திலே, இடப் பிரச்சினை காரணமாக அது அமைவதில் காலதாமதம் ஏற்பட்டது. 2011-ல், சட்டமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற பின்னாலே, வருவாய்த் துறையின்மூலம் சீர்காழி வட்டாரம், காரைமேடு கிராமம், அண்ணன் பெருமாள் கோவில் என்ற பகுதியிலே, மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தில் அமைப்பதற்கு முன் நுழைவு அனுமதி பெற்று இன்றைக்கு ஏறத்தாழ ஒன்றரை ஆண்டு காலம் ஆகிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பின்தங்கிய தொகுதியாக இருக்கின்ற என்னுடைய சீர்காழி தொகுதிக்கு மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் அமைப்பதற்கு விரைந்து ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த ஆண்டு ஒதுக்கப்படுகின்ற நிதியிலிருந்து அந்தப் பகுதியில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று*

இந்த நிதியாண்டிலேயே அந்த வட்டார பகுதிநேர மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைத்துத் தரப்படும், நிரந்தரக் கட்டடம் கட்டித் தரப்படும் என்று அறிவித்தமைக்கு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

50—

குடமுழுக்கு

***36043—திரு. கே.வி. சேகரன்**:

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, நெடுங்குணம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீராமச்சந்திரப் பெருமாள் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதி, சேத்துப்பட்டு வட்டம், நெடுங்குணம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீராமச்சந்திரப் பெருமாள் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்திட தொல்லியல் வல்லுநர் குழுவின் கருத்து பெறப்பட்டுள்ளது. இக்கருத்துமீது விழுப்புரம் மண்டல வல்லுநர் குழு மற்றும் உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் ஒப்புதல் பெற்று மதிப்பீடு